செ.வெ.எண்:38 நாள்:15.12.2017

# பத்திரிக்கை செய்தி

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் Assistant Conservator of Forests என்ற பதவிக்கான போட்டித்தேர்வுகள் 17.12.2017 அன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் மட்டும் திருநெல்வேலி மாவட்டத்தில் செயிண்ட் ஜான்ஸ் மேல்நிலைப்பள்ளி (2 Halls), மக்தலீன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி (2 Halls), சாராள் தக்கர் மேல்நிலைப்பள்ளி, செயிண்ட் சேவியர்ஸ் மேல்நிலைப்பள்ளி ஆகிய கல்வி நிலையங்களில் வைத்து நடைபெறவுள்ளது. இத்தேர்வு மையத்தில் 17.12.2017 அன்று 1710 நபர்கள் தேர்வு எழுதவுள்ளார்கள். தேர்வு மையங்களில் தேர்வினை வீடியோ கேமரா மூலம் பதிவு செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தேர்வு நாளன்று தடைபடாத மின்சாரம் வழங்கவும், பேருந்துகளை தேர்வு மையத்திற்கு இயக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தேர்வு நடைபெறும் கல்வி மையத்தில் காவல் துறை மூலம் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்படி தேர்வு எழுதுவோர் தேர்வு மையத்திற்கு முன்கூட்டியே உரிய நேரத்தில் தேர்வு எழுத ஆஜராகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், தேர்வு எழுதும் அறைக்குள் செல்போன்களை எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு எழுதுபவர்கள் தவிர இதர நபர்கள் தேர்வு நடைபெறம் வளாகத்திற்குள் செல்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் இதன் மூலம் தெரிவிக்கிறார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.